# இயேசுவே வாரும்

*காலேப் யோசுவா*
☎ : 044 – 26490183
Cell : 9444701953

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*4/130, காந்தி தெரு,*
*சென்னீர்குப்பம், சென்னை* – 600 056.

## *கைவேலையல்லாத நித்திய வீடு*

1. தேவனுடைய சித்தத்தினாலே, பரிசுத்தவான்கள் பூரணப்படும்பொருட்டு, கிறிஸ்துவின் ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, பக்திவிருத்தி அடைவதற்காகவும், கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான், தேவனுடைய சபைக்கு எழுதுகிறதாவது:
நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2. ***கைவேலையல்லாத நித்திய வீடு*** குறித்து நாம் தியானிப்பதற்கு நான் தெரிந்துகொண்ட வேதவாக்கியங்கள் 2 கொரி 5:1–9, 2 பேது 1:13,14, பிலி 3:20 மற்றும் 1 தெச 5:23. ஆகும்.
பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்த கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரமவாசஸ்தலத்தை தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாக இருக்கிறோம்; தரித்துக்கொண்டவர்களானால், நிர்வாணிகளாய் காணப்படமாட்டோம். இந்த கூடாரத்தில் இருக்கிற நாம் பாரம் சுமந்து தவிக்கிறோம்; இந்த போர்வையை களைந்து போட வேண்டும் என்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காக போர்வை தரித்தவர்களாய் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே; ஆவி என்னும் அச்சாரத்தை நமக்கு தந்தவரும் அவரே. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோம் என்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாய் இருக்கிறோம். நாம் தைரியமாகவே இருந்து இந்த தேகத்தை விட்டு குடிபோகவும், கர்த்தர் இடத்தில் குடியிருக்கவும் அதிகமாக விரும்புகிறோம். இதின் நிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்கு பிரியமானவர்களாய்யிருக்க நாடுகிறோம். (2கொரி 5:1–9)
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து; இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன். (2பேது 1:13,14)
நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். (பிலி 3:20)
சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. (I தெச 5:23)

3. என்னில் உள்ள கிறிஸ்துவின் சத்தியத்தை கொண்டு இந்த செய்தித் தொகுப்பை எழுதுவதற்கு முன் நான் உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறதாவது; கடந்த 29 ஆண்டுகளாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைவதற்காக தேவனுடைய சுவிசேஷத்தையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் எனது திராணிக்கு மிஞ்சிய செலவுகளையும் பொருட்படுத்தாது, அவைகளை சகித்துக்கொண்டு, இலவசமாகவே உங்களுக்கு பிரசங்கித்து, உபதேசித்து எழுதி வருகிறேன். என்னுடைய உள்ளம் உங்களை பற்றி அதிக அன்பாயிருக்கிறதே அதற்கு காரணம். நான் பல வேளைகளில் குறைவுபட்டது உண்டு. அந்த வேளைகளில் உங்களில் யாரையும் வருத்தப்படுத்தவில்லை. ஆனாலும் ஒரு கைவிரல் எண்ணிக்கைக்குரிய சகோதரர்கள் என் குறைவை நிறைவாக்கியதும் உண்டு. அதை நான் மறுக்கவும், மறக்கவும் முடியாது. ஆனாலும், எவ்விதத்திலும் நான் உங்களில் யாருக்காவது பாரமாயிராதபடிக்கு என்னை காத்துக்கொள்ளவே எப்பொழுதும் ஜாக்கிரதை உள்ளவனாகவே இருக்கிறேன். ஒரு சகோதரன் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி எனக்கு உதவி செய்தது உண்டு. பல ஆண்டுகள் கழித்து நான் அதை உங்களுக்கு கடனாகத்தான் தந்தேன், ஆதலால் திருப்பித்தாருங்கள் என்று கேட்டு அதை திருப்பி பெற்றுக்கொண்டு வருவதும் உண்டு. இன்றுகூட மிக்க நெருக்கத்தின் மத்தியில் தான் இருக்கிறேன். எனது வங்கிக்கடன்கள் ஒரு பெரிய பிரச்சனையாக எழுந்துள்ளது. ஆனாலும் என் பாரத்தையெல்லாம் கர்த்தர் மீது வைத்துவிட்டு அன்றன்றுள்ள என் ஊழிய, குடும்ப பணிகளை சோர்வின்றி செய்து கொண்டே வருகிறேன். கர்த்தர் தாங்குகிறார், பலப்படுத்துகிறார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

4. பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டு என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறான். அப்போஸ்தலனாகிய பேதுருவும், 2 பேது 1:13,14 வசனங்களில் ***நான் என் கூடாரத்தில் இருக்குமளவும்***, மற்றும் ***நான் என் கூடாரத்தை விட்டுப்போவது*** எனவும் எழுதுகிறான். அப்போஸ்தலர்களாகிய பவுல் மற்றும் பேதுரு எழுதியுள்ளதை நாம் தியானிக்கும்போது ***பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு என்பது நம்முடைய மாம்ச சரீரத்தையே குறிக்கிறதாக இருக்கிறது. மேலும் இந்த மாம்ச சரீரம் அழிந்துபோனால் அதாவது நமக்கு மரணம் ஏற்படுமாகில்,*** **(Physical Death)** ***நித்திய வீடு ஒன்று அதாவது ஆவிக்குரிய சரீரம் ஒன்று நமக்கு பரலோகத்தில் உண்டு எனக் காண்கிறோம்.*** ஏனென்றால் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாய் உள்ளவர்களின் அதாவது அவருடைய மணவாட்டியின் குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. பிலி 3:20. நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். எபி 13:14. ஆதலால்தான் இந்த உலகம் நமக்கு பாத்திரமாயிருக்காது.

5. ***இதை சற்று சுருக்கமாக கூறப்போனால் நம்முடைய மாம்ச சரீரத்திற்கான வீடு இந்த பூமியில் இருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய சரீரத்திற்கான வீடு பரலோகத்தில் இருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வந்து, அதாவது மணவாளன் மணவாட்டிக்காக மேகங்கள் மேல் ஆகாயத்தில் வந்து, அவளை அந்த பரலோக வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் குற்றமற்றதாக காக்கப்பட வேண்டும். 1 தெச 5:23.***

6. இங்கு நாம், நம்முடைய சரீரத்தை தேவன் எவ்வாறு சிருஷ்டித்தார் (Created), உருவாக்கினார் (Made) என்பது குறித்து சற்று தியானித்தால் நலமாயிருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். தேவன் ஆதி 1:26–ல் நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்று கூறுவதாக காண்கிறோம். இதை ஆங்கிலத்தில் God said; Let us make man in our image, after our likeness என வாசிக்கிறோம். இங்கு ***சாயல்*** என்ற தமிழ் பதத்திற்கு Image என்ற ஆங்கில வார்த்தையும், ***ரூபம்*** என்ற சொல்லுக்கு Likeness என்ற பதமும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. Image (சாயல்) என்றால் ஆங்கிலத்தில் Reflection (பிரதிபிம்பம்) என்று பொருள்படும். ***ஆக ஆங்கிலத்தில் Image/ Reflection என்பது சாயல் / பிரதிபிம்பம் என்று தமிழில் பொருள்படும்.*** உதாரணமாக முகம் பார்க்கும் கண்ணாடியில் நமது முழு உருவத்தை பார்க்கிறோம். இது என்ன? கண்ணாடி நமது உருவத்தை பிரதிபலிக்கிறது. அதாவது நமது சாயலை கண்ணாடியில் காண்கிறோம். நாம் தேவனை ஒரு கண்ணாடியில் பார்த்தால் அவர் சாயல் எப்படி இருக்குமோ, அதாவது அவரது பிரதிபிம்பம் கண்ணாடியில் எப்படி இருக்குமோ அதே சாயலில் மனுஷன் / ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டான்.

7. ரூபம் என்பதற்கு Likeness என்ற வார்த்தை ஆங்கிலத்தில் உள்ளது. Likeness என்ற வார்த்தைக்கு ஆங்கில அர்த்தம் Similarity. அதாவது ***அதே போன்ற ஒன்று*** என்று பொருள். உதாரணமாக இந்த பொம்மையை போன்ற ஒரு பொம்மை. அல்லது இதே போன்று ஒற்றுமையுடைய ஒன்று. அதாவது தேவனுடைய சரீரத்தைப்போன்ற ஒரு சரீரத்தை, உடையவனாக மனுஷன்/ ஆதாம் உருவாக்கப்பட்டான். அதாவது தேவன் தம்முடைய சரீரத்தை பிரதிபலிக்கும் சரீரத்தை உடையவனாக மனுஷனை உண்டாக்குவோம் என்றார். தம்முடைய சரீரத்தைபோன்ற ஒரு சரீரத்தை உடையவனாக மனுஷனை உண்டாக்குவோம் என்றார்.

8. அடுத்து நாம் ஆதி 1:27 தியானிக்கும்போது தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார் என்றும், தேவ சாயலாகவே அவனை சிருஷ்டித்தார் எனவும் காண்கிறோம். இதை ஆங்கிலத்தில் God Created man in his own image, in the image of God created he him எனவும் காண்கிறோம். மேலும் மனுஷனை ஆணு பெண்ணுமாக சிருஷ்டித்தார் எனவும் காண்கிறோம். Male and female created he them என ஆங்கிலத்தில் காண்கிறோம்.

9. தேவன் ஆதி 1:26–ல் மனுஷனை உண்டாக்குவோமாக (Let us make man) என்றார். ஆனால் ஆதி 1:27–ல் மனுஷனை சிருஷ்டித்தார் (God Created man) எனவும் காண்கிறோம். உண்டாக்கினார், சிருஷ்டித்தார் என்ற இரு சொற்களும் வித்தியாசமான பொருளை, அர்த்தத்தை உடையது. உண்டாக்கினார் என்பது ஒன்றிலிருந்து ஒன்றை உருவாக்கினார் என்று பொருள்படும். இந்த பொம்மையை போன்று மற்றொரு பொம்மையை உருவாக்குவதாகும். ஆனால் சிருஷ்டித்தார் என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உண்டுபண்ணுவது. தேவன் பூமியானது புல்லையும், விதையை பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்கள் தங்கள் விதையுடைய கனிகளை தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார் அது அப்படியே ஆயிற்று. பாருங்கள் ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை பிறப்பித்தல். அது சிருஷ்டிப்பு ஆகும்.

10. இப்பொழுது மனுஷன் தேவ சாயலாகவும், ரூபத்தின் படியேயும் உண்டாக்கப்பட்டான். தேவ சாயலாகவே சிருஷ்டிக்கப்பட்டான் எனவும் காண்கிறோம். அப்படியானால் தேவ சாயல் (Image) என்ன? இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டியது : தேவன் ஒரு ஆவி யோ 4:24. God is a Spirit. தேவன் மனுஷன் அல்ல. எண். 23:19. God is not a man. தேவன் ஒரு ஆவியாக இருந்தாலும், அது நித்திய ஆவி எபி 9:14. Eternal Spirit. ஆதலால் இவர் அநாதி தேவன் என்று அழைக்கப்படுகிறார். உபா 33:27. Eternal God. இப்பொழுது கவனியுங்கள், நித்தியத்திற்கு தொடக்கமும் (Begining), முடிவும் (End) கிடையாது. மேலும் தேவன் ஒரு ஆவியாக இருப்பதால், அவர் சர்வ வியாபி. சங் 139:7–10 வசனங்களை தியானியுங்கள். தேவன் ஒரு ஆவியாக, அதுவும் சர்வ வியாபியாக இருப்பதால் வானங்களும், வானாதி வானங்களும் இவரை கொள்ளாது. 2 நாளா 2:6, 1 இராஜா 8:27. இவர் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர். எரே 23:24. இதனால் தேவன் அதரிசனமானவர் கொலோ 1:15 யோபு 23:8–10. தேவன் அதரிசனமாக இருப்பதினால் இவருக்கு ரூபம் எதுவும் கிடையாது. உபா 4:12. ஆதலால் தேவனை ஒருவரும், ஒருபோதும் கண்டதில்லை, காணவும் முடியாது. யோ 1:18, 1 யோ 4:12. காரியம் இப்படியிருக்க தேவனுக்கு சாயல், ரூபம் எங்கே? மேலும் தேவனுக்கு ஒரு சாயல் மற்றும் ரூபம் இருக்குமானால் பின் அது எங்கே இருந்து வந்தது?

11. எதுவும் சிருஷ்டிக்கப்படும் முன்பு, எதுவும் உருவாக்கப்படும் முன்பு இந்த நித்திய ஆவி தேவன் என்று அழைக்கப்படவில்லை. ஏனென்றால் தேவன் என்பதற்கு ஆராதனைக்குரியவர் என்று பொருள். God is an object of worship. உன் தேவனாகிய கர்த்தரை பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. மத் 4:10, நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து, குனிந்து முழங்காற் படியிடக்கடவோம் சங் 95:6. ஆம், நாம் நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக மாத்திரம் பணிந்து, குனிந்து முழங்காற்படியிட வேண்டும். எந்த சபைத்தலைவனுக்கும் முன்பாக அல்ல, எந்த அரசியல் தலைவனுக்கும், கத்தோலிக்க திருச்சபை போப்புக்கு முன்பாகவும் அல்ல. எந்த உலகப்பிரகாரமான ஸ்தாபன சபை பிஷப்களுக்கு முன்பாகவும் அல்ல. ஏனென்றால் அவர்கள் யாவரும் நம்மைப்போல பாடுள்ள மனுஷர்களே. ஆராதனைக்குரியவர் தேவன் ஒருவரே. அம்மாவுக்கு முன்பாகவும் ஐயாவுக்கு முன்பாகவும் தாழ விழுந்து பணிந்துகொள்ள கூடாது. இந்நாட்களில் இப்படி விழுவது அம்மாவிடமிருந்தும், ஐயாவிடமிருந்தும் ஒரு ஆதாயத்தை பெருவதற்காகவே. மாய்மால உலகம்.

12. ஆக நித்திய ஆவி தேவன் என்று அழைக்கப்படவில்லை. ஏனென்றால் தேவன் ஆராதனைக்குரியவர். அவரைத் தொழுதுக்கொள்ள, அதாவது நித்திய ஆவியை தேவன் என்று தொழுதுகொள்ள அவருக்கென்று ரூபம் எதுவும் இல்லை. மேலும் அவரைத் தொழுதுகொள்ள அவரால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள் எதுவும் இல்லை. ஆக இந்த நித்திய ஆவி தான் தேவன் என்று அழைக்கப்படும்பொருட்டு, எதுவும் தன்னால் சிருஷ்டிக்கப்படும் முன் தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். அதாவது நித்திய ஆவி, தன்னில் தானே ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். அதாவது நித்திய ஆவி தன்னைத் தானே ஒரு சிருஷ்டிப்புக்குள்ளாக்கி, தனக்குத் தானே ஒரு சரீரத்தை உடையவரானார். அதன் மூலம் அவர் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானார். கொலோ 1:15. இப்பொழுது பாருங்கள், நித்திய ஆவி தான் தேவன் என்று அழைக்கப்படும்பொருட்டு தான் சிருஷ்டிக்கப்போகும் சிருஷ்டிப்புகள் தன்னை தொழுதுகொள்ள, தன்னை ஆராதிக்க, தன்னை பணிந்துகொள்ள தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார்.

13. இந்த ஆவிக்குரிய மகிமையின் சரீரம்தான் ***வார்த்தை*** (Logos) என அழைக்கப்பட்டது. மேலும் நித்திய ஆவி தன்னைத் தானே ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்திற்குள் கொண்டு வந்த வேளை ***ஆதி*** எனவும் அழைக்கப்படலாயிற்று. இதைத்தான் அப் யோவான் ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்கிறான். யோ 1:1. பாருங்கள், வார்த்தை ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோ 6:63. பாருங்கள் என்னில் உள்ள சிந்தனைகள், எண்ணங்கள் அனைத்தும் நான் பேசும்போது வார்த்தையாக வெளியே வருகிறது. அதுபோன்று தேவனுடைய சிந்தனைகள், எண்ணங்கள் அனைத்தும் ஆதி முதல் அந்தம் வரை உள்ளவைகள் அனைத்தும் வெளியே வந்து ஒரு சரீரமாயிற்று. அந்த சரீரம் தான் ***வார்த்தை*** என அழைக்கப்பட்டது. இப்பொழுது தேவன் வார்த்தையில் அறியப்படுகிறார். இது மாம்சமும் இரத்தமும் இல்லாத சரீரம். ஆக நித்திய ஆவி தன்னில் தானே ஒரு ஜீவனுடையவராகி ஒரு சரீரத்தை உடையவரானதால் **யேகோவா (கர்த்தர்)** என்று அழைக்கப்பட்டார். யேகோவா என்றால் தன்னில் தானே ஜீவன் உள்ளவர் என்று பொருள். ***வார்த்தை (Logos) தான் யேகோவா.*** கர்த்தர் இந்த ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தில் இருந்துதான் சகலத்தையும் சிருஷ்டித்தார். அவரிடமிருந்து வார்த்தை புறப்பட்டுச் சென்றது. அது எந்த நோக்கத்திற்கு சென்றதோ அது நிறைவேறிற்று. என் வாயிலிருந்து புறப்படும் வசனம், அது வெறுமையாய் என்னிடத்திற்கு திரும்பாமல் அது நான் விரும்புகிறதை செய்து நான் அதை அனுப்பின காரியம் ஆகும்படி வாய்க்கும். ஏசா 55:11. பாருங்கள், தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று ஆதி 1:3.

14. இந்த ஆவிக்குரிய சரீரத்தின் சாயல்தான் தேவ சாயல். இந்த ஆவிக்குரிய சரீரத்தின், வார்த்தையின் சாயலாகத்தான் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான் ஆதி 1:27. இந்த சரீரத்திற்கு மாம்சமும், இரத்தமும் கிடையாது. இந்த சரீரம் ***தியாபினி*** என்று அழைக்கப்பட்டது. இந்த ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தைத்தான் மோசே காண விரும்பினான். யாத் 33:18, ஆனால் ஒரு மனுஷனும் இந்த மகிமையின் சரீரத்தைக் கண்டு உயிரோடு இருக்க முடியாது யாத் 33:20. பாருங்கள் அப். யோவான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவரது பாதத்தில் விழுந்தான். வெளி 1:17 ஆக மோசே அவர் கடந்து சென்ற போது அவர் பின்பாகத்தைக் கண்டான். யாத் 33:23. அது நம்முடைய பின் பாகத்திற்கு ஒத்ததாக இருந்தது. ஏனென்றால் மனுஷன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்.

15. இப்பொழுது ஆவிக்குரிய சரீரத்தில் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன், தன் ஆவியின் சுபாவத்தை வெளிப்படுத்த மாம்ச சரீரத்தை உடையவனாகி ஜீவாத்துமானவானான். தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆதி 2:7. யேகோவா சாட்சியினர் நாம் சுவாசிக்கும் சுவாசமே ஆத்துமா என்று கூறுகின்றனர். நாம் சுவாசிக்கும் சுவாசம் ஆத்துமா அல்ல. சுவாசம் என்பது காற்று. இந்த காற்றையே நீங்கள் நாசியின் வழியாக சுவாசிக்கின்றீர்கள். தேவன் என்ன செய்தார் என்றால், அவர் நித்திய ஜீவனின் சுவாசத்தை ஊதினார். அப்பொழுது அவன் ஜீவாத்துமாவானான். மரிக்க முடியாத ஆத்துமா. நித்திய ஜீவனின் சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அவன் நித்திய ஜீவ ஆத்துமாவானான். ஆவியின் சுபாவம்தான் ஆத்துமா. ஆவிக்குரிய சரீரத்திலிருந்த மனுஷனுக்கு மாம்சமும் இரத்தமும் கிடையாது. ஆம், ஒரு ஆவிக்கு மாம்சம் மற்றும் எலும்பும் கிடையாது. லூக் 24:39. ஆக ஆவிக்குரிய சரீரத்திலிருந்த மனுஷனுக்கு ஆதி 1:26,27: தேவன் பூமிக்குரிய மேனியை கொடுத்து (ஜென்ம சரீரம்/மாம்ச சரீரம்) தம்முடைய ஜீவ சுவாசத்தை (Breath of Life) அவனுடைய நாசியில் ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான். ஆதி 2:7, யோபு 33:4. அவன் உயிருள்ளவன் ஆனான். மனுஷரில் ஒரு ஆவி உண்டு; சர்வ வல்லவருடைய சுவாசமே அவர்களை உணர்வுள்ளவர்களாக்கும். யோபு 32:8.

16. அதாவது ஆதி 1:27 ஆவிக்குரிய சரீரத்தில் (Theophany) சரீரத்தில் இருந்த மனுஷன்: ஆதி 2:27–ல் மாம்ச சரீரத்துக்கு (ஜென்ம சரீரத்துக்கு) வந்தான். முந்திய சரீரம் மாம்சமும் இரத்தமும் இல்லாத சரீரம். பிந்தின சரீரம் மாம்சமும் இரத்தமும் உடைய சரீரம். இப்போது மனுஷன் ஆவி ஆத்துமா சரீரத்தை உடையவனான். இந்த மாம்ச சரீரம் தேவனுடைய ரூபத்தின் படி உருவாக்கப்பட்டது. ஆதி. 2:7. இந்த மாம்ச சரீரம் ஆதி 1:27–ன் ஆவிக்குரிய சரீரத்தைப்போன்ற மாம்ச சரீரம். அதாவது ஆதி. 1:27–ன் ஆவிக்குரிய சரீரத்தின் ரூபத்திற்கு ஒற்றுமையான சரீரம்.

17. இப்போது தேவசாயல் (image) வானத்திற்குரிய மேனி. அதாவது ஆவிக்குரிய சரீரம். தேவ ரூபம் (likeness) பூமிக்குரிய மேனி. ஆதாவது மாம்ச சரீரம் 1கொரி. 15:40. பாருங்கள், ஆவிக்குரிய சரீரம் உண்டு. ஜென்ம சரீரம் உண்டு. 1கொரி 15:44. ஜென்ம சரீரம் அழிவுள்ளதாய் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் அழிவில்லாததாய் எழுந்திருக்கும். 1கொரி 15:42. பாருங்கள், ஜென்ம சரீரம் முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. மனுக் குலத்தில் ஒருவர் முதலாவது ஜென்ம சரீரத்தை அடைகிறார். பின்புதான் ஆவிக்குரிய சரீரத்தை அடைகிறார். ஆதலால் ***சகோ.பிரன்காம் முன்பு ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தார், பின்பு மாம்ச சரீரத்திற்கு வந்தார் என்று உபதேசிப்பது பிசாசு. கள்ள கபடமுள்ள வேலையாட்களின் உபதேசம்.***

18. ஆனால் ஆதாமுக்கடுத்த காரியத்தில், அவன் ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்டான். ஆதி.1:27. மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டான். ஆதி. 2:7 ஆதாமினுடைய காரியத்தில் ஆவிக்குரிய சரீரம் முந்தினது. மாம்ச சரீரம் பிந்தினது. இயேசு கிறிஸ்துவின் காரியத்திலும் அப்படியே. ஆனால் நம்முடைய காரியத்தில் ஜென்ம சரீரம் (மாம்ச சரீரம்) முந்தினது. முதலாவது நாம் மாம்ச சரீரத்தில் பிறக்கிறோம். இனி ஆவிக்குரிய சரீரத்தை பெற்றுக்கொள்ளப் போகிறோம். ஆவிக்குரிய சரீரம் நமக்கு பிந்தினது. I கொரி 15:46. இப்பொழுது நாம் மண்ணானவனுடைய சாயலை அணிந்திருக்கிறோம். இனி வானவருடைய சாயலை அணியப்போகிறோம். I கொரி 15:49, எபே.4:24.

19. சகோ பிரன்காம் 2 கொரி 5:1 – க்கு என்ன விளக்கம் கொடுக்கிறார் என்பதை நாம் கே.ப 117–ல் தியானிக்கலாம். பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்து போனாலும், நமக்காக வேறொன்று ஏற்கனவே காத்திருக்கிறது. இது சரியா? அது ஒரு சரீரம். ஒரு குழந்தை தன் தாயின் கர்ப்பத்தில் உருவாகிக்கொண்டிருக்கும் போது, அது அங்கு வைக்கப்பட்டவுடன், அது முதலில் ஆவியாயுள்ளது. அந்த ஆவி மாம்சத்தை தரித்துக்கொள்ளும் போது, ஒரு சிறு ஜீவகிருமி மாம்சத்தை தரித்துக்கொண்டு, அந்த தாயின் கர்ப்பத்தில் இருந்து வெளியே வரும்போது கர்ப்பத்தில் அது உதறுகிறது. குலுக்குகின்ற சிறு தசைகளை கொண்டதாயுள்ளது. அவை ஜீவ அணுக்கள். ஒரு குதிரை மயிரை நீங்கள் தண்ணீரில் போட்டால், அது மிதக்கி, அசைந்து கொண்டிருக்கும். அதை நீங்கள் தொடும்போது அது குதிக்கும். அப்படி தான் தாயின் வயிற்றில் உள்ள ஒரு குழந்தையும் உள்ளது. ஆனால் அது இந்த உலகத்தில் பிறந்து அதன் முதல் சுவாசத்தை சுவாசிக்கும்போது அது ஜீவாத்மா ஆகிறது. பூமிக்குரிய சரீரம் இவ்வுலகத்தில் பிறந்தவுடனே அதை ஏற்றுக்கொள்ள வானத்துக்குரிய ஒரு சரீரம், ஆவிக்குரிய சரீரம் ஒன்று உள்ளது. மாம்சத்துக்குரிய சரீரம்

விழுந்தவுடனே, அதற்காக பரலோக கூடாரம் ஒன்று காத்திருக்கிறது. பூமிக்குரிய இந்த கூடாரம் அழிந்துபோனால் அதற்காக பரலோக கூடாரம் ஒன்று காத்திருக்கிறது. ஒரு குழந்தை பூமிக்கு மாம்சத்தில் வந்தவுடனே அதை ஏற்றுக்கொள்ள ஆவிக்குரிய சரீரம் ஒன்று காத்திருக்கிறது. மாம்சத்துக்குரிய சரீரம் அழிந்துபோனவுடனே, ஆவிக்குரிய சரீரம் ஒன்று மறுபுறத்தில் காத்திருக்கிறது. இதை நாம் தியாபினி (Theophany) என்று அழைக்கிறோம்.

20. ஒரு குழந்தை தன் தாயின் கருவில் உருவாகும்போது, அது மாம்சமும் இரத்தமும் உள்ளதாய், குதித்து உதைக்கிறது. ஆனால் அது பிறக்கும்போது நீங்கள் காணமுடியாத ஒரு ஆவியும், ஒரு ஆத்துமாவும் தாயின் அருகே தொங்கிக்கொண்டு, அது பிறந்தவுடனே அதற்குள் நுழைய காத்திருக்கிறது. குழந்தை இவ்வுலகில் பிறந்தவுடனே அதற்குள் நுழைந்துகொள்ள, தேவன் ஒரு ஆத்துமாவையும் ஒரு ஆவியையும் சிருஷ்டிக்கிறார். குழந்தை வளர்ந்து நன்மை தீமை இன்னதென்று அறிகிறது. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் முன் நன்மை தீமை அறியத்தக்கதாக விருட்சம் வைக்கப்பட்டது போல இதன் முன்பும் வைக்கப்படுகிறது. அது இரண்டில் ஒன்றை தெரிந்துகொள்கிறது. பின்பு அது அறிவாளியாகிறது. அது வளர்ந்துகொண்டே செல்கிறது. இது தேவனுடைய மகத்தான திட்டம். கடைசியாக வாழ்க்கை முடிவுக்கு வருகிறது. இந்த மாம்ச சரீரம் மெல்ல மெல்ல அழிந்து மறைந்து போகும்போது, அதை ஏற்றுக்கொள்ள மற்றொரு சரீரம் ஆயத்தமாயுள்ளது. நமக்குள் இப்பொழுது உள்ள ஆத்துமாவும், ஆவியும் இந்த சரீரத்தை விட்டு வெளியேறினவுடனே, அது வேறொரு சரீரத்துக்கு செல்கிறது. அதுதான் ஆவிக்குரிய சரீரம். இதை நீங்கள் ***தேற்றவாளன்*** என்ற செய்தியில் 52, 53 பத்திகளில் தியானிக்கலாம்.

21. பிரியமானவர்களே பாருங்கள், ஒருவன் பிறந்து, மரித்தபின்தான் ஆவிக்குரிய சரீரத்தை அடைகிறான். ஜென்ம சரீரம் முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. சகோ. பிரன்காமுக்கென்று விசேஷித்த பிரமாணம் எதுவும் கிடையாது. ஆதாலால் அவர் முந்தி ஆவிக்குரிய சரீரத்தில் (தியாபினி சரீரத்தில்) தோன்ற முடியாது. மேலும் ஒரே நேரத்தில் அவர் மாம்ச சரீரத்திலும், ஆவிக்குரிய சரீரத்தில் தோன்ற, காட்சியளிக்க முடியாது.

22. தேவன் தன்னைத்தானே சிருஷ்டித்துக்கொண்டு, சகல சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானபோது அவருடைய சரீரம் தியாபினி சரீரமாக இருந்தது. அது வார்த்தை (Logos) என அழைக்கப்பட்டது. இந்த சரீரத்தில் தோன்றி, மறைய முடியும். இது மாம்சமும், இரத்தமும் இல்லாத சரீரம். ஆவிக்குரிய சரீரம். அதன்பின் காலம் நிறைவேறினபொழுது தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். கலா 4:5, 1திமோ 3:16. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு, அதாவது மாம்ச சரீரத்தில் பிறந்து, பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்த பின் தம்முடைய பழைய தியாபினி சரீரத்திற்கு சென்றார்.

23. ஆனால் நாமோ தியாபினி சரீரத்தை பைப்பாஸ் செய்து மாம்ச சரீரத்திற்கு வந்தோம். எதற்காக? நாம் சோதிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. இந்த மாம்ச சரீர அழிவுக்குப்பின் நாம் தியாபினி சரீரத்திற்கு செல்கிறோம். இதற்கு சகோ. பிரன்ஹாம் எக்காரணத்தைக் கொண்டும், எவ்விதத்திலும் விதி விலக்குக்கு உட்பட்டவர் அல்ல. அவரும் ஒரு ஆண், பெண் மாம்ச இச்சையில் பிறந்த ஒரு ஜென்ம பாவியே. இவருடைய தாயும் இவரை, உங்களையும் என்னையும் போன்று பாவத்தில்தான் கர்ப்பந்தரித்தாள். சகோ. பிரன்ஹாமை ஒரு தனிப்பட்ட பிரமாணத்தை உடையவராக போதிப்பவன் எவனாக இருந்தாலும் அவன் ஜனங்களை மோசம்போக்கும் பிசாசு. உங்கள் பாஸ்டர்களில் இந்த பிரத்தியேகமான உபதேசத்தைக் கொண்டு வருபவர்கள் பிசாசே. சகோ. பிரன்ஹாம் தனது மாம்ச சரீரத்தில் பிறப்பதற்கு அல்லது வெளிப்படுவதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே தனது ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாபினி சரீரத்தில் தோன்றி யோவானுக்கு பத்மு தீவில் வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் தூதனாக இருந்தார் என்பது நூற்றுக்கு நூறு சதவீதம் பிசாசே.

24. பாருங்கள் நாம் தற்பொழுது மாம்ச சரீரத்தில் அதாவது ஜென்ம சரீரத்தில்தான் இருக்கிறோம். ஆனால் இன்னொரு சரீரம், ஆவிக்குரிய சரீரம் அதாவது தியாபினி சரீரம் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறது. 2 கொரி 5:1. ஒருவனுடைய ஜென்ம சரீரம் அழிவுள்ளதாய் விதைக்கப்பட்ட பின்புதான், ஆவிக்குரிய சரீரம் அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கர்த்தருடைய ஞானத்தை கவனியுங்கள் நாம் உயிர்த்தெழும்போது, முதலாவது நடப்பது என்னவெனில், உயிரோடிருப்பவர்கள் இங்கிருப்பார்கள். முதலாவதாக உயிர்த்தெழுதல் நிகழும், அதாவது நித்திரையடைந்தவர்களின் உயிர்த்தெழுதல். இது பாவத்தில் நித்திரை செய்துகொண்டிருந்தவர்களின் உயிர்த்தெழுதல் அல்ல. இது பாவத்தில் நித்திரை கொண்டிருப்பவர்கள் அல்ல. இவர்கள் இன்னும் ஆயிரம் ஆண்டு காலம் வரைக்கும் தொடர்ந்து நித்திரையிலிருந்து எழும்புவது இல்லை. அதாவது கிறிஸ்துவுக்குள் மரித்து பூமியின் தூளில் நித்திரை செய்துகொண்டிருப்பவர்கள் முதலில் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். இந்த அழிவுள்ள சரீரங்கள் கர்த்தருடைய எடுத்துக்கொள்ளப்படும் கிருபையினால் அழியாமை தரித்துக்கொள்ளும். அதன்பிறகு நாம் எல்லாரும் ஒன்று கூடுவோம். அவர்கள் ஒன்று கூட தொடங்கும்போது உயிரோடிருக்கிற நாம் மறுரூபப்படுவோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் மரணத்தை காண்பதில்லை. சடுதியாக நம்மை வேகமாக அடித்துக்கொண்டு செல்வது போன்ற ஒன்று உண்டாகும். அப்பொழுது நீங்கள் மறுரூபப்படுவீர்கள். நீங்கள் ஆபிரகாமைப்போல வயோதிபனிலிருந்து வாலிபனாகவும், வயோதிப ஸ்திரீயிலிருந்து வாலிப ஸ்திரியாகவும் மாறிவிடுவீர்கள். இந்த சடுதியான மாற்றம் என்ன? சற்று கழிந்து நீங்கள் சிந்தனையைப்போல் பிரயாணம் செய்வீர்கள். அப்பொழுது நீங்கள் ஏற்கனவே உயிர்த்தெழுந்தவர்களை காண முடியும். என்ன ஒரு நேரம்! அதன் பிறகு நாம் அவர்களுடன் ஒன்றுசேர்ந்து, அவர்களோடு கூட எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம். இந்த கருத்தை நீங்கள் கே.ப. 240–ல் தியானிக்கலாம்.

25. *வேதவாக்கியங்களில் இக்காலத்திற்குரிய செய்தியில் போதனை இப்படியாயிருக்க சகோ. பிரன்ஹாம் மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆதலால் அவர் தன் மாம்ச சரீரத்தை பெற்று, அது அழிந்த பின்புதான் ஆவிக்குரிய சரீரத்தை பெற முடியும். ஆதாலால் சகோ. பிரன்ஹாம் மாம்ச சரீரத்தில் பிறக்கும் முன்பு ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தார் என்ற போதனை பேய்த்தனத்துக்கடுத்தது. இது கள்ள கபடமுள்ள வேலையாட்களின் போதனை. பாருங்கள் நாம் மாம்ச சரீரத்துக்கு வந்தபின்பு தான் ஆவிக்குரிய சரீரம் காத்துக்கொண்டிருக்கிறது. வேதவாக்கியங்களின் உபதேசம் இப்படியிருக்க, வேத வாக்கியங்களின்படியே சகோ. பிரன்ஹாமும் போதிக்க, இந்த வீணர்கள் பிரன்ஹாம் பிரன்ஹாம் என துதி பாடிக்கொண்டு உங்களை மோசம் போக்குகிறது என்ன? இவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லிக்கொண்டு தங்கள் சிந்தைகளினாலே வீணர்களானார்கள். இந்த சாத்தானின் கூட்டத்திலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளுங்கள். பிரியமானவர்களே நாம் இந்த சரீரத்தை விட்டு பிரியும்போதுதான், அந்த சரீரத்தை ஆவிக்குரிய சரீரத்தை பெற்றுக்கொள்ள முடியும். அதுதான் உண்மை.*

*26. அடுத்து நாம் மாம்ச சரீரத்தில் இருந்துகொண்டு ஆவிக்குரிய சரீரத்தில் இருக்க முடியாது. நாம் ஒரே நேரத்தில் இரு சரீரங்களில் இருக்க முடியாது. அதாவது நாம் ஒரே நேரத்தில் இரு வித்தியாசமான சரீரங்களில் காட்சியளிக்க முடியாது. இதுவும் உண்மையே. ஆதலால் என் சகோதரரே சகோ. பிரன்ஹாம் 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாபினி சரீரத்தில் இருந்தார் என்பதும், இக்காலத்தில் மாம்ச சரீரத்தில் இருந்து கொண்டு ஏழு தூதர்கள் கூட்டத்தில் தன் ஆவிக்குரிய சரீரத்தைக் கண்டார் என்பதும், ஆட்டுத் தோலை போர்த்திய ஓநாய்களின் உபதேசமே. நாம் ஒரே நேரத்தில் இரு சுபாவங்களை உடையவர்களாக இருக்கலாம். ஆனால் ஒரே நேரத்தில் இரு சரீரத்தில் இருக்க முடியாது. பாருங்கள் நாம் மாம்ச சரீரத்தில் பிறந்தோம். இதில் சகோ. பிரன்ஹாமும் அடங்குவார். இனி நாம் ஆவிக்குரிய சரீரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். இதிலே சகோ. பிரன்ஹாமும் அடங்குவார். அவருக்கென்று பிரத்யோகமான விதிகள், வழிமுறைகள் எதுவும் கிடையாது. அவரும் நம்மைப்போல ஒரு பாடுள்ள மனிதன் தானே.*

27. *கே.ப. 381 பத்தி 38.* **You can't be in two bodies at one time. but there can be two natures in you at one time.** *நீங்கள் ஒரே நேரத்தில் இரு சுபாவத்தை கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் ஒரே சமயத்தில் இரு சரீரங்களில் இருக்க முடியாது. இதுதான் இக்காலத்துக்குரிய செய்தியின் உபதேசம்.*

28. மேலும் ஏழு தூதர்கள் சகோ. பிரன்ஹாமிடம் வரும்போது அதில் ஒரு தூதன் மட்டும் அவரையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தான். அது சகோ. பிரன்ஹாம். அப்போது அவர் ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தார். அதே வேளையில் அவர் மாம்ச சரீரத்திலும் இருந்தார் என்பது ஒரு தவறான போதனை என்பதையும் நாம் கண்டோம். இந்த ஏழு தூதர்கள் தேவ தூதர்கள் ஆவர். பாருங்கள் சகோ. பிரன்ஹாம் ***ஏற்றக்காலத்தில் ஆவிக்குரிய ஆகாரம்***, பத்தி 84–ல் ஒரு கூட்டம் தேவ தூதர்கள் வானத்திலிருந்து பூமி முழுவதையும் குலுக்கி அங்கு நிற்பதைக் கண்டேன். அந்த தூதர்களின் இறக்கையும், அவை எவ்வாறு மூடப்பட்டிருக்கின்றன என்பதையும் பாருங்கள் என்கிறார். அப்படியானால் சகோ. பிரன்ஹாமுக்கு இறக்கைகள் எப்போது முளைத்தன? தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றும் இவர்கள் தங்கள் தப்பிதங்களுக்கு தகுதியான பலனை தங்களுக்குள் அடைவார்கள். சத்தியத்தை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதபடியால், தகாதவைகளை பேச, எழுத தேவன் அவர்களை கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்தார்.

29. மனுஷன் (ஆதாம்) முதலில் தியாபனி சரீரத்தில் இருந்தான். தேவசாயலாக இருந்தான். ஆதலால் அவன் பாவம் எதுவும் செய்ய முடியாது. அவன் தேவகுமாரன். பின்பு மாம்ச சரீரத்திற்கு வந்து மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவனானான். அவன் ஆவிக்குரிய சரீரத்திலிருந்து மாம்ச சரீரத்திற்கு வந்தான். ஆனால் நாமோ நேரடியாக மாம்ச சரீரத்திற்கு வந்து பாவத்திற்குள்ளாகி, அதிலிருந்து மீட்கப்பட்டு, ஆவிக்குரிய சரீரத்திற்கு திரும்புகிறோம். இது என்ன? முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளினால் கெட்டுப்போகிற பழைய மனுஷனைக் களைந்துபோட்டு உள்ளத்திலே புதிதான ஆவி உள்ளவர்களாகி மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுதலாகும். எபே 4:22–24.

30. தேவன் மனுஷனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். ஆதி 1:27 எவ்வாறு தேவனுடைய ஆவிக்குரிய சரீரத்திற்குள் அவருடன் அவருடைய மணவாட்டி இருந்தாளோ அதேபோன்று ஆதாமுடைய ஆவிக்குரிய சரீரத்திற்குள் அவனுடைய மணவாட்டி இருந்தாள். ஆணும் பெண்ணுமாக சேர்ந்துதான் மனுஷன். மனுஷன் தன்னில் தானே நிறைவு பெற்றவன் அல்ல. அவன் நிறைவு பெற ஒரு பெண் தேவை ஆதி 2:18. பாருங்கள் கிறிஸ்துவின் சரீரம் அவருடைய மணவாட்டி. கிறிஸ்து தலையாக இருக்கிறார். அவருடைய சரீரமாக அவருடைய மணவாட்டி இருக்கிறாள். மனுஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்து இருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள். ஆதி 2:24. புருஷன் மனைவி இருவரும் தங்கள் திருமணத்திற்குப்பின் ஒன்றாக சேரும்போதுதான் ஒரே சரீரமாகிறார்கள். இந்த சம்பவத்திற்குப்பின் அவர்கள் இருவர் அல்ல, ஒருவராயிருக்கின்றனர்.

31. தேவன் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊத அவன் ஜீவ ஆத்துமாவானான். ஆதி 2:7 அதாவது ஆவிக்குரிய சரீரத்தில் மனுஷன் தியாபினி சரீரத்தில் இருந்தான். மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டான். அதாவது மனுஷன் தேவசாயலாக, ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்டு பின் மிருக சாயலாக மாம்ச சரீரத்தில், ஜென்ம சரீரத்தில் உருவாக்கப்பட்டான். இப்பொழுது மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த ஆண் பெண் பாகங்களில் பெண் பாகம் மட்டும் இன்னும் ஆவிக்குரிய சரீரத்திலே ஆதாமுக்குள் இருந்தது. ஆண் பாகம் வெளியே கொண்டு வரப்பட்டு தன் மாம்ச சரீரத்தை பெற்றுக்கொண்டது. இதன் பின்பு ஆதாமின் ஆவிக்குரிய சரீரத்திற்குள் இருந்த பெண் பாகம் வெளியே கொண்டு வரப்பட்டது. அது எப்பொழுது நடந்தது? தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். கர்த்தர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவனை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார் ஆதி 2:21,22.

32. பாருங்கள், ஆதாம் ஆணும் பெண்ணுமாக ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாபினி சரீரத்தில் இருந்தான். ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த ஆண் பாகத்தை தேவன் மாம்ச சரீரத்தில் உருவாக்கினார். ஆதி 2:7. அதே வேளையில் அவனுக்குள்ளிருந்த பெண் பாகம் இன்னும் மாம்ச சரீரத்தில் வெளிப்படாமல் ஆவிக்குரிய சரீரத்திலே, தியாபினி சரீரத்திலே இருந்தது. இதைத் தான் சகோ. பிரன்ஹாம் ஆதாமின் ஒரு பாகம் ஆவிக்குரிய சரீரத்திலும், மற்றொரு பாகம் மாம்ச சரீரத்திலும் இருந்தது என்கிறார். சாத்தான் இந்த உண்மையை தாறுமாறாக்கி, தன் லௌகிக ஞானத்தைக்கொண்டு நாம் ஆவிக்குரிய சரீரத்திலும், மாம்ச சரீரத்திலும் ஒரே நேரத்தில் இருக்கலாம் என ஏதேன் தோட்டத்தில் ஏவாளை வஞ்சித்த பிசாசு உங்களில் அநேகரை வஞ்சித்துவிட்டான். இந்த உபதேசத்தைக்கொண்டு வரும் உங்கள் பாஸ்டர்களில் அநேகர் பிசாசின் கருவிகளே என்பதை மறந்துவிடாதிர்கள். ஏனென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலம்.

*33. முடிவாக நாம் பிறப்பினால் நேரிடையாக மாம்ச சரீரத்திற்கு வந்து, இந்த கூடாரம் அழிந்தபின் நித்திய வீடாகிய ஆவிக்குரிய சரீரத்தை அடைவோம். சகோ. பிரன்ஹாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆவிக்குரிய சரீரத்தில் இல்லை. இதற்கு வேதத்தில் ஆதாரம் எதுவும் கிடையாது. அவரும் நம்மைப்போல் மாம்ச சரீரத்தில் பிறந்தார். ஏழு தூதர்கள் சந்திப்பு வேளையில் அவர் ஒரே நேரத்தில் மாம்ச சரீரத்திலும், ஆவிக்குரிய சரீரத்திலும் இல்லை. ஏனென்றால் நாம் ஒரே நேரத்தில் இரு சரீரத்தில் இருக்க முடியாது.*

34. இங்கு நாம் சுருக்கமாக ***ஆவி ஆத்துமா சரீரத்தை*** குறித்து, தியானிப்பது நலமாய் இருக்கும் என நம்புகிறேன். உங்களுக்கு உள்ளே ஆத்துமா. ஆத்துமாவுக்கு வெளியே ஆவி, ஆத்துமா மற்றும் ஆவி சரீரத்தில் குடி கொண்டிருக்கிறது. முதல் வட்டம், சரீரம். இங்கு மனித உணர்ச்சிகள், இரண்டாவது வட்டம் ஆவி, இங்கு ஆவியின் உணர்ச்சிகள் அதாவது சுயநலம், விருப்பம் போன்றவை. இதன் உள்ளே ஆத்துமா உள்ளது. அந்த ஆத்துமா முன் குறிக்கப்பட்டுள்ளது. வெளிப்புறத்தில் உள்ள சரீரத்தை ஆவியின் கீழ்படிதலுக்கு கொண்டுவர அவர்கள் ஆவியை அபிஷேகிக்க முடியும். ஆனால் பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் எசே 18:4,20. அது அவிசுவாசத்தின் காரணமாக தேவனுடைய வார்த்தையை புறக்கணிக்கும்.

35. சரீரத்துக்கு ஐந்து புலன்கள் உண்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பார்த்தல் | – | See | – | கண் | – | Eye |
| உணர்தல் | – | Feel | – | தோல் | – | Skin |
| ருசி பார்த்தல் | – | Taste | – | நாக்கு | – | Tongue |
| முகர்தல் | – | Smell | – | மூக்கு | – | Nose |
| கேட்டல் | – | Hear | – | காது | – | Ear |




இவைகள் இவ்வுலக பொருட்களுடன் தொடர்புகொள்ள உபயோகப்படுகின்றன.

36. ஆவிக்கும் ஐந்து புலன்கள் உண்டு.

1. கற்பனை – Imagination
2. மனசாட்சி – Conscience
3. ஞாபகம் – Memory
4. யோசனை – Reason
5. பாசம் – Affection

ஆக பாருங்கள் சரீரத்துக்குள்ளே ஆவி. ஆவிக்குள்ளே ஆத்துமா. இந்த ஆத்துமாதான் உண்மையான நீ. நீ யார் என்பதை ஆத்துமா அறிவிக்கும். ஏனென்றால் ஆவியின் தன்மைதான் ஆத்துமா.

37. ஆவியை குறித்து நாம் தியானிக்கும்போது ஒன்று மனுஷனில் உள்ள ஆவி. மற்றொன்று தேவனுக்குரிய ஆவி. 1 கொரி 2:11. தேவனுடைய ஆவி ஒருவனுக்குள் வாசமாக இருந்தால் அவன் மாம்சத்துக்குட்பட்டவனாயிராமல் ஆவிக்குட்பட்டவனாய்யிருப்பான். கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல. ரோ 8:9. உங்களுடைய ஆவி தேவனுடைய ஆவியாக இருக்குமானால் அப்பொழுது நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருப்பீர்கள். 1 கொரி 3:16,17 பாருங்கள் தேவனுடைய ஆவி எங்கு உண்டோ அங்கு ஆவியின் கனியும் (கலா 5:22) காணப்படும். இன்று அனோகர் மணவாட்டி, மணவாட்டி என குதிக்கிறார்கள். பரிசுத்த ஆவியை பெற்றுள்ளோம் என மார்பு தட்டி பேசுகிறார்கள். ஆனால் அவர்களிடம் கிரியை இல்லையே. ஆவியின் கனிகள் இல்லையே. சகோதர சிநேகம் இல்லையே. தான் உண்டு, தன் பிள்ளைகள் உண்டு, தன் குடும்பம் உண்டு என்ற குறுகிய வட்டத்திற்குள்தானே இருக்கிறார்கள். இந்நாட்களில் பலர் தங்களை மாணவாட்டி என அழைத்துக்கொண்டு ஒரு கனியற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டு தங்களை தாங்களே வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்களே என்பதை காணும்போது அவர்கள் மேல் மிக்க பரிதாபப்படுகிறேன்.

38. தேவனுடைய ஆவி உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திச் செல்லும். யோ 16:13, 1 யோ 2:27 இன்று அநேகர் மார்க்கம் தவறி செல்வதற்குக் காரணம் என்ன? இன்று அநேகர் தவறான உபதேசங்களில் நிலைத்து நிற்க காரணம் என்ன? கர்த்தருடைய வருகை குறித்து தவறான உபதேசம், தசம பாகம் குறித்து தவறான உபதேசம் தேவத்துவம் குறித்து தவறான உபதேசம், சகோ. பிரன்ஹாம் ஊழியம் குறித்து தவறான உபதேசம். இவை அனைத்தும் ஏன்? மக்கள் தேவனுடைய ஆவியை பெற்றுக்கொள்ளாததே காரணம். ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஆவியை பெற்றுள்ளதாகவே கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய ஆவியை பெறவே இல்லை, ஐயா இல்லை. அதுதான் முற்றிலும் உண்மை. அவர்கள் தங்களை தாங்களே வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய ஆவியை பெற்றுக்கொண்டதாக நடிக்கிறார்கள். ஆனால் பாருங்கள் ***தேவனுடைய ஆவியை பெற்றவர்கள் எப்படி இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியும்? கர்த்தருக்குரிய தசமபாகத்தை குறைவாக செலுத்தி கர்த்தரை கொள்ளையடிக்க முடியும். பாஸ்டர்கள் இதர ஊழியர்களை கர்த்தருக்குரிய தசமபாகத்தில் கொள்ளையடிக்க முடியும்? தேவஆவியை பெற்ற பெண்கள் பொதுஸ்தலங்களில் எப்படி பணிபுரிய முடியும்? தேவனுடைய ஆவியை பெற்ற பெண்கள் எப்படி தங்கள் கர்ப்பங்களை கலைக்க முடியும்? கர்ப்பத்தடை செய்ய முடியும்? நீங்கள் பெற்றிருப்பது தேவனுடைய ஆவி என்றால் அது தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்த வேண்டுமே? யோ 6:63. தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்துக்குரிய செய்திக்கு செவி கொடுக்கிறார்கள். விசுவாசிக்கிறார்கள். ஆனால் அதன்படி நடப்பது இல்லை. ஏன்? அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார். உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறார்கள். நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு பரிசுத்தமான ஜீவியம் செய்து ஆவியில் பரிசுத்தமாகுதலுக்குள் கடந்து சென்றுள்ளார்கள். ஆனால் அவர்களிடம் நித்திய ஜீவன் இல்லை. ஏன்? ஆத்துமாவில் இருள். ஆத்துாவில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லை. ஆதலால் மரணம் அவர்களை மேற்கொள்கிறது. ஏனென்றால் பாவம் செய்யும் ஆத்துமா சாகும்.***

39. மனுஷனில் உள்ள ஆவி அவனை மாம்ச கிரியைகளுக்குள் வழி நடத்தும். கலா 5:19–21. அது அவனை மாம்சத்தின் இச்சைகளுக்குள்ளும், கண்களின் இச்சைகளுக்குள்ளும், ஜீவனத்தின் பெருமைகளுக்கும் வழிநடத்தும். அது எப்பொழுதும் தேவனுக்கு விரோதமாக போராடிக்கொண்டேயிருக்கும். அது எப்போதும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக செயல்பட்டுக்கொண்டேயிருக்கும். அது தேவனுடைய வார்த்தையை மறுதலிக்கும். இம்மைகளுக்குரிய நன்மைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவை பற்றிக்கொண்டிருக்கும்.

40. ***ஆத்துமா, இது உங்களில் உள்ள ஆவியின் தன்மை. உங்களில் வாசம் செய்யும் ஆவியின் கிரியைகளைக்கொண்டு உங்கள் ஆத்தமாவை நிதானிக்க முடியும். உங்கள் ஆத்துமாதான் நீங்கள் யார் என்பதை அறிவிக்கிறது. உங்கள் ஆத்துமாவில்தான் தேவன் கிரியை செய்கிறார். ஆத்துமாதான் மனிதனை***

மிருகங்களில் இருந்து வித்தியாசப்படுத்துகிறது. மிருகங்களுக்கு ஆத்துமா கிடையாது. ஒருவன் தன் ஆத்துமாவை தேவனுடன் இணங்கச் செய்தால் உங்கள் உலக சுபாவம் அழிகிறது. ஆத்துமாவுக்கு ஒரே ஒரு சாலைதான் உண்டு. ஒன்று விசுவாசம் (ஊஹண்ற்ட்) அடுத்தது அவிசுவாசம் / சந்தேகம் (doubt) தேவனுடைய வார்த்தை திருமணமான பெண்கள் வீட்டில் தரித்திருக்க வேண்டும் என தீத் 2:5-ல் போதிக்கிறது. நீ அதை விசுவாசித்தால் வீட்டில் தரித்திருப்பாய். நீ அதன் மீது சந்தேகம் கொண்டால் வீட்டிற்கு வெளியே நிலைத்திருப்பாய். அதுதான் அது. நீ தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதற்கு கீழ்படியும்போது உன் ஆத்துமா தேவனுடன் இணைந்துள்ளது. நீ தேவனுடைய வார்த்தையை விசுவாசியாதபோது அதில் உலக சுபாவம் குடிகொண்டிருக்கிறது. நீ இப்பிரபஞ்சத்திற்குரியவள், நீ இப்பிரபஞ்சத்திற்குரியவன்.

41. தேவனுடைய வார்த்தை இரு எஜமான்களுக்கு ஒருவன் ஊழியம் செய்யக்கூடாது என்றுக் கூறியும் நீ இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து, உன்னையும் வஞ்சித்து உலக மக்களையும் ஏமாற்றி வருவாயாகில் உன்னுடைய ஆத்துமா தேவனோடு இணங்கவில்லை. மாறாக அதில் உலக சுபாவம் குடிகொண்டிருக்கிறது. நீ தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறாய்.

42. மிருகங்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறியவில்லை. ஏனென்றால் அதற்கு பாவத்தை குறித்து எதுவும் தெரியாது. ஏனென்றால் அதற்கு ஜீவஆத்துமா கிடையாது. ஆனால் அதற்கு ஜீவன் உண்டு.

43. உன்னுடைய ஆத்துமா நல்லதோ, கெட்டதோ மரணத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. உன் ஆத்துமாவில் உலகமும் அதன் ஆசை இச்சைகளும் இருக்குமானால் அது உலகம். அது உலகத்தோடு அழியும். உலகமும் அதன் ஆசை இச்சைகளும் உன் ஆத்துமாவிலிருந்து விடுபடுமாயின் அது தேவனோடு இருக்கும். பாருங்கள் உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால், அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. ஏனென்றால் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதன் இச்சைகளும் ஒழிந்துபோகும். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். 1 யோ 2:15,17.

44. மற்றொரு முக்கியமான போதனையையும் கவனியுங்கள். ஒருவனுடைய ஆவியில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இருக்கலாம். ஆனால் அவன் ஆத்துமாவில் இருள் இருக்கும். பாருங்கள் நீங்கள் தேவனை விசுவாசிக்கலாம். தேவன் பேரில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கலாம். உங்களிடத்தில் தேவபக்தி காணப்படலாம். நீங்கள் பிறந்தது முதல் இன்றுவரை கர்த்தர் உங்களை ஆதரித்து வருவதாக சாட்சி கூறலாம். உங்களிடத்தில் நல்ல ஜெபஜீவியம் உண்டு. காலையிலும், மாலையிலும் நன்கு ஜெபிக்கிறீர்கள். இரவு குடும்ப ஜெபம் உண்டு. எப்பொழுதும் இயேசுவே இயேசுவே என்று கூறிக்கொண்டே இருக்கலாம். உங்களை நீங்களே கிறிஸ்துவின் மணவாட்டி மணவாட்டி என பிரகடனம் செய்துகொள்ளலாம். எங்களுக்கு எந்தவிதமான குறைவும் இல்லை, குறைவுகள் அனைத்தும் நிறைவாகின்றன. தேவன் எங்களை பேர் சொல்லி அழைக்கிறார் என சபையில் சாட்சிகள் பகிரலாம். நீங்கள் தினசரி வேதம் வாசித்து இக்காலத்திற்குரிய செய்தியை தியானிக்கலாம். கர்த்தருக்குரிய தசமபாகத்தை கடமைக்காக ஏதோ ஒரு தொகையை செலுத்தி வரலாம். இவையனைத்தும் நலமாகத்தான் தோன்றுகிறது.

45. மறுபக்கம் நீங்கள் டிவி பார்க்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள். உங்களிடம் உள்ள செல்வ செழிப்பினால் உங்களிடம் மேட்டிமை காணப்படுகிறது. உங்களிடத்தில் அகங்காரம் உண்டு. உங்களிடத்தில் ஆணவம் உண்டு. தாழ்மை இல்லை. பெண்களாகிய நீங்கள் பொது ஸ்தலங்களில் பணி செய்து வருகிறீர்கள். கருச்சிதைவு செய்கிறீர்கள், கர்ப்பத்தடை செய்து கொள்கிறீர்கள், பெண்களுக்கு மகிமையான நீண்ட தலைமயிரை கத்தரித்து குதிரைவால் கொண்டை போட்டுக்கொள்கிறீர்கள். உங்கள் கணவன் மீது ஆதிக்கம் செலுத்துகிறீர்கள். ஆண்களாகிய உங்களிடத்தில் கண்களின் இச்சையும், மாம்சத்தின் இச்சையும், ஜீவனத்தின் பெருமைகள் உண்டு. சபைகளில் ஏழை எளியவர்களை அடிமைப்படுத்துகிறீர்கள். இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறீர்கள். நான்கு, ஐந்து பேர்களை உங்கள் முன் உட்காரவைத்து உங்களை பாஸ்டர் என அழைத்துக்கொள்கிறீர்கள். உங்கள் புகழ்ந்து பேசுகிறவர்களை வாழ்த்துகிறீர்கள். தட்டி கேட்பவனை மட்டம் தட்டுகிறீர்கள். கர்த்தருக்குரிய தசமபாகத்தை உங்களுக்காகவே முற்றிலுமாக அபகரித்துக்கொள்கிறீர்கள். விசுவாசியை அவிசுவாசியுடன் பிணைக்கிறீர்கள். பாருங்கள் இதுதான் அது. அதுதான் இது. ஆவியில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம். ஆனால் ஆத்துமாவில் இருள். ஏனென்றால் உங்களிடம் விசுவாசத்தை, உன் நம்பிக்கையை வெளிப்படுத்தும் கிரியைகள் இல்லை. கிரியை இல்லாத விசுவாசமே உன்னிடத்தில் காணப்படுகிறது. கிரியை இல்லாத விசுவாசம் செத்தது அல்லவா? யாக். 2:26. இரு தோணிகளிலும் நீ கால் வைத்திருக்கிறாய். அதுதான் அது. இரு மனம் உள்ளவன் தன் வழிகளிளெல்லாம் நிலையற்றவனாய்யிருக்கிறான் என்பதை அறிவாயா? யாக் 1:8. ஒன்று நீ தேவனையும் தேவனுடைய வார்த்தையையும் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். அல்லது உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். இரு நிலையிலும் நீ கால் வைத்திருக்கிறாய். ஆதலால் நீ நிலையற்று அலைகிறாய். ஆம் உன் ஆவியில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் காணப்பட்டாலும், உன் ஆத்துமாவில் இருள், இருளே. அப்படியானால் அந்தோ உன் நிலை பரிதாபம்.

46. பெண்களை கவனியுங்கள் : அவர்கள் தங்கள் தலைமயிரை கத்தரித்துக்கொள்ள விரும்புகின்றனர், கத்தரிக்கின்றனர். தேவன் அவர்களுக்கு இயற்கையாகவே கொடுத்த அழகு போதாது என அவர்கள் அழகுபடுத்தும் சாதனங்களை உபயோகித்து, தங்கள் முகங்களை வர்ணம் தீட்டிக்கொள்கின்றனர். தங்கள் ஆடைகளை இருக்கமாக அணிந்து அவர்களை பார்ப்பவர்கள் உள்ளத்தில் பாலுணர்ச்சியை தூண்டச் செய்கின்றனர். அவர்களுக்கு அது பிரியம். இன்பத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருத்தி உயிரோடிருக்கும்போதே செத்தவள் என்று வேதம் கூறுகிறது. ஆண்களோடு தங்களை சமமாக்கிக்கொண்டு, ஆண்களோடு சேர்ந்து பொதுஸ்தலங்களில் பணிபுரிகின்றனர். ஆனாலும் சபைக்கு, ஜெபகூட்டங்களுக்கு ஒழுங்காக சென்று வருகின்றனர். காலை, மாலை, இரவு ஜெபிக்கின்றனர், இது என்ன ஆவியின் மேலுள்ள அபிஷேகம். அந்த அபிஷேகம் ஆத்துமாவின் மேல் அல்ல. அவள், சிந்திக்கும் ஸ்திரீ அல்ல, அவள் சிந்திக்கும் ஸ்திரீயாக இருப்பாளாகில் தான் சார்ந்திருக்கும் சபை கடைசி நாளில் அவளை நியாயந்தீர்க்கப்போவது இல்லை. மாறாக தேவனுடைய வார்த்தை அவளை நியாயந்தீர்க்கும் என்பதை அவள் அறிந்திருப்பாள். இதனால் தான் இந்த பெண்களைக் குறித்து தாவீதின் குமாரனும் எருசலேமின் இராஜாவுமாகிய

பிரசங்கி: என் மனம் இன்னும் ஒன்றை தேடுகிறது. ஆனால் நான் அதை கண்டுபிடிக்கவில்லை. அதாவது ஆயிரம் பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன் ஆனால் அந்த ஆயிரம் பேருக்குள்ளே ஒரு ஸ்திரீயை காணவில்லை என்கிறான். பெண்களுடைய காரியத்தை குறித்து பிரசங்கி நன்றாக அறிந்தவனாய் இருக்கிறான்.

47. **ஆவி** உங்களை ஒரு பிரத்தியோகமான காரியத்திற்குகென்று அபிஷேகிக்கக் கூடும். நீங்களும் அதை செய்கிறீர்கள். அதனால் நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளீர்கள் என்று அர்த்தம் இல்லை. உதாரணமாக தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் உரைத்தனர். யூதாஸ் பிசாசுகளை துரத்தினான். ஆவி அவர்களை அபிஷேகித்தது. மழை நல்லோர் மேலும், தீயோர் மேலும் பொழிகிறது. களைகள் கோதுமையுடன் கூட சேர்ந்து களிகூறும். ஆனால் அதன் உட்பாகத்தில் அது என்னவாய் உள்ளதோ அதுதான் அது.

48. நீங்கள் கிறிஸ்தவர்களைப்போல மிகவும் நன்றாக நடந்துகொள்ளலாம். ஆனால் நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று அதன் அர்த்தம் அல்ல. அது முற்றிலும் உண்மை. ஆவி அங்கிருக்கக்கூடும். உண்மையான ஆவி, பரிசுத்த ஆவி, உங்களை அபிஷேகிக்கக் கூடும். இருப்பினும் நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளீர்கள் என்று அதன் அர்த்தம் அல்ல. அது உங்களுக்குள்ளே இருக்கும் ஆத்துமா. அது ஒருபோதும் மரிப்பதில்லை. அது நித்திய ஜீவனை ெற்றுள்ளது. அது தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்து தேவனிடத்திற்கு போகிறது. அது ஆத்துமா. ஆவி என்னை அபிஷேகிக்கக் கூடும். அப்பொழுதும் உங்களைக் குறித்து எனக்கு ஒன்றுமே தெரிவதில்லை. ஆனால் அந்த உள்ளுக்குள்ளும் உள்ளே உள்ளது கிரியை செய்யும்போது அது தேவன்.

49. மாம்சம், ஓ! அது விபச்சாரம் வேண்டாம் என்கிறது. நல்லது ஆவியும், தான் விபச்சாரம் செய்யக்கூடாது என்கிறது. ஆனால் அதற்கும் உள்ளில் அந்த ஆத்துமா பதிந்து கிடக்கிறது. அதுதான் ஆதிக்கம் செலுத்த வேண்டும். உள்ளேயிருந்து கட்டளை பிறப்பிக்கும்போது, அது மற்ற அனைத்தையும் அதற்கு கீழ்படியச் செய்கிறது. அதுதான் ஒருவனை கட்டுப்படுத்தும் கோபுரம். உள்ளுக்குள் இருக்கும் உள்ளானது. அது ஆத்துமா. அது ஆவியை கட்டுப்படுத்துகிறது. ஆவி சரீரத்தை கட்டுப்படுத்துகிறது. ஆகவே வெளிப்புற வெள்ளையடித்தல் ஒரு வித்தியாசத்தையும் உண்டாக்குவதில்லை. அவர்கள் வெளிப்புறத்தில் ஒரு விசுவாசிக்கும் கிறிஸ்தவர்களைப்போல காணப்படுகின்றனர். ஆனால் அவர்கள் உள்ளுக்குள் உள்ளானது விசுவாசிக்கக் கூடாத ஆத்துமா. இதை நீங்கள் ***விசுவாசத்தை வெளிப்படுத்துவது கிரியைகள்*** என்ற செய்தியில் 206–210 பத்திகளில் தியானிக்கலாம்.

50. சபைக்கு பெண்கள்தான் அதிகம் செல்கின்றனர். ஏன்? அவர்கள் விரும்பும் ருசியை அவர்கள் அங்கு பெற்றுக்கொள்ள முடிகிறது. பாருங்கள் அவர்கள் குட்டை கால் சட்டை அணிந்து, முகத்தில் வர்ணம் பூசி தங்கள் தலைமயிரை கத்தரித்து, அவர்கள் பொதுஸ்தலங்களுக்கு சென்று பணிபுரிவதை அது கண்டுகொள்வதில்லை. அவர்கள் விரும்பும் ருசியை அவர்கள் அங்கு பெறுகிறார்கள். அவர்கள் விரும்பும் ருசியை ஒரு சபையில் அவர்களால் பெற முடியாமல் போனால் அவர்கள் அந்த சபையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், அங்கு செல்ல மாட்டார்கள். அது மிகவும் தெளிவான ஒரு காரியமே. அவர்கள் விருப்பமான காரியத்தை செய்ய அனுமதிக்கும் ஒரு சபைக்கே அவர்கள் செல்ல விரும்புகின்றனர். இதனால் தானே கத்தோலிக்க மற்றும் ஸ்தாபன சபைகளில் பெண்களின் கூட்டம் அதிகம். அங்கு கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை.

51. உங்கள் சரீரமானது தேவனால் பெற்றதும், உங்களில் தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது. நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல. 1 கொரி 6:19, 3:17. அதாவது உங்களுடைய சரீரம் உங்களுடையது அல்ல. அதை நீங்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுள்ளீர்கள். ஏன்? பரிசுத்த ஆவி உங்களில் தங்க. உங்கள் சரீரம் கர்த்தருக்குரியது. 1 கொரி 6:13. அதை நீங்கள் மோக இச்சைகளுக்கு உட்படுத்தக்கூடாது. 1 தெச 4:6. பாருங்கள் மனுஷன் செம்மையானவனாகவே உண்டாக்கப்பட்டான். பிர 7:29. ஆதாம் ஏவாள் இருவரும் நிர்வாணிகளாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் இருவரும் வெட்கப்படவில்லை. ஆதி 2:25. அவர்கள் நிர்வாணியாய் இருப்பதை அவர்கள் அறியவில்லை. ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் திரையிடப்பட்டிருந்தார்கள். அதுதான் அது.

52. பிரியமானவர்களே, சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் உங்களது மாம்ச, ஆவிக்குரிய சரீரத்தைப்பற்றிய உபதேசங்களிலிருந்து விலகும்படி சாத்தானால் கெடுக்கப்படுமோ என்று பயந்திருக்கிறேன். எப்படியெனில் உங்களிடத்தில் உங்கள் பாஸ்டர்கள் வேதவாக்கியங்களில் காணப்படாத, இக்காலத்திற்குரிய செய்தியில் காணப்படாத ஒரு புதிய உபதேசத்தைக் கொண்டுவந்து அதாவது வெளி 1:1–ல் கூறப்பட்டுள்ள கிறிஸ்துவின் தூதன் சகோ. பிரன்ஹாம். அவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தனது தியாபினி சரீரத்தில் இருந்தார் என்றும், தம்முடைய ஊழிய நாட்களில் இரு சரீரத்தில் மாம்சம் மற்றும் ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தார் என்னும் வஞ்சகமான உபதேசங்களைக் கொண்டு வந்து உங்களை மோசம் போக்குகிறார்கள். பிரியமானவர்களே! நீங்கள் இக்காலத்திற்குரிய செய்தியின் வாயிலாக படித்து, அறிந்து, கற்றுக்கொண்ட உபதேசங்களுக்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாத இருதயங்களை வஞ்சிக்கிறார்கள்.

53. முடிவாக பிரியமானவர்களே நம்முடைய குடியிருப்பு இப்பூமியில் அல்ல. கைவேலையல்லாத நித்திய வீடு அதாவது ஆவிக்குரிய சரீரம் நமக்கு பரலோகத்தில் இருக்கிறது. அதை சுதந்தரித்துக்கொள்ள காத்துக்கொண்டிருக்கிறோம். அதுவரை, அதாவது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது நம்முடைய ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக. வாருங்கள் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள் 1 தெச 5:23 எபே 4:24.
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடு கூட இருப்பதாக ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

ஜூன் / ஆகஸ்ட் – 2007.